

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் வெண்கரும்பூர் கிராமத்தில் ரூ.19.75. லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் தியாகராஜன், செம்பியன் இளவரசன், இராஜேந்திரன், ஜெயராமன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும், துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றிய தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி கண்டன உரைநிகழ்த்தினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ஏ .கே. மணி விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி,விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சிவா,ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு – தொழில் முனைவோர்

# பயிற்சித் திட்டத்தில் நடந்த முறைகேடுகள் - அதனை நிவர்த்தி செய்த நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, பிப். 14-

ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) எனும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் பயிற்சித் திட்ட செயலாக்கத்தில், குறைந்த வேலை வாய்ப்பு, தகுதி விதிமுறைகளை மீறுதல், பயனாளிகளின் பதிவுகளை நகல் செய்தல், பயிற்சி மையங்களை மூடுதல் மற்றும் பலவீனமான கண்காணிப்பு பொறிமுறைகள் உள்ளிட்ட கடுமையான குறைபாடுகளை கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (சிஏஜி) இந்திய தணிக்கை மற்றும் பட்டயக்கணக்காளர் ஜெனரல் தனது அறிக்கையில் எடுத்துரைத்துள்ளதா?

அப்படியானால், மாநில வாரியாக CAG அறிக்கை அளித்த கண்டுபிடிப்புகளின் விவரங்கள் தருக?

PMKVY இன் கீழ் அதிக அளவு செலவழிக்கப்படாத நிதிகள் மற்றும் நிலுவையில் உள்ள தொகை (பேஅவுட்கள்) ஆகியவை PMKVYன் கீழ் தெரிவிக்கப் பட்டுள்ளதா?

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (என்எஸ்டிசி) மற்றும் மாநிலத் திறன் பணிகள் உட்பட செயல்படுத்தும் முகவர் மீது அரசாங்கம் ஏதேனும் பொறுப்புக்கூறலை நிர்ணயித்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

வெளிப்படைத்தன்மை, சிறந்த நிதிப் பயன்பாடு, நம்பகமான பயனாளிகளின் தரவு மற்றும் இத்திட்டத்தின் நடப்பு மற்றும் எதிர்காலக் கட்டங்களில் மேம்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள் என்னென்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தில் இணை அமைச்சர் (தனி பொறுப்பு) ஜெயந்த் சௌத்ரி எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

இந்தியத் தணிக்கை மற்றும் பட்டயக்கணக்காளர் ஜெனரல் கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (CAG) PMKVY இன் செயல்திறன் தணிக்கையை 2022 வரை அதன் ஆரம்ப கட்டங்களை உள்ளடக்கியது மற்றும் தரவு சரிபார்ப்பு, பயனாளிகள் விவரங்கள், மதிப்பீட்டாளர் தகவல், தகுதி சரிபார்ப்பு மற்றும் கண்காணிப்பு செயல்முறைகள் தொடர்பான கொள்கை செயல்பாடு அமைப்புகளில் உள்ள சில குறைபாடுகளைக் தீவிரமானது என்று சுட்டிக்காட்டியுள்ளது..

PMKVY 4.0 இன் கீழ், ஆதார் அடிப்படையிலான eKYC, முக அங்கீகாரம் மற்றும் புவிகுறியிடப்பட்ட வருகை, QR குறியிடப்பட்ட டிஜிட்டல் சான்றிதழ்கள், ஸ்கில் இந்தியா டிஜிட்டல் வலைத்தளத்தில் நிகழ்நேர டாஷ்போர்டுகள், பலப்படுத்தப்பட்ட மதிப்பீட்டாளர் மற்றும் பயிற்சி மையத்தின் அங்கீகாரம், NCVET மூலம் சுயாதீனமான கண்காணிப்பு மையம், NCVET மூலம் பலப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மையம் உள்ளிட்ட விரிவான நடவடிக்கைகளை ஒன்றிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தெளிவான KPIகளுடன் வழிகாட்டுதல்கள், மற்றும் வலுவான அபராதம் மற்றும் மீட்பு கட்டமைப்பு.

இடைநிறுத்தம், தடுப்புப்பட்டியலில் சேர்த்தல், நிதி மீட்பு மற்றும் பிற கடுமையான நடவடிக்கைகள் உட்பட ஒழுங்கு நடவடிக்கைகள், இணக்கமின்மை நிறுவப்பட்ட இடங்களிலெல்லாம் எடுக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் திட்டத்தின் கீழ் வலுவான பொறுப்புக்கூறல், சரிபார்ப்பு மற்றும் மேற்பார்வை வழிமுறைகளை நிறுவனமயமாக்குகிறது.

PMKVY 4.0 இன் கீழ் தொழில்துறை இணைப்பு மற்றும் வேலை வாய்ப்பு வாய்ப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. PMKVY இன் கீழ் உள்ள படிப்புகள் வளர்ந்து வரும் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் தொழில்துறை தலைமையிலான அமைப்புகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. தொழில்துறை 4.0, ட்ரோன், செயற்கை நுண்ணறிவு (AI), ரோபாட்டிக்ஸ், மெகாட்ரானிக்ஸ் போன்ற வளர்ந்து வரும் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்காலத் தயாரான வேலைவாய்ப்பு தொழில்கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வேலை வாய்ப்புக்கான அதிக வாய்ப்புகளை செயல்படுத்த, ஸ்கில் இந்தியா டிஜிட்டல் ஹப் (SIDH) கல்வித் திறன், ஒரு தளமாகத் தொடங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் சூழல் அமைப்புகள் பரந்த அளவிலான பங்குதாரர்களை இலக்காகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் சேவைகளை வழங்குகின்றன. பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் விவரங்கள் SIDH போர்ட்டலில் சாத்தியமான தொழில் நிறுவனர்களிடமும் முதலாளிகளுடன் இணைவதற்குக் கிடைக்கின்றன.

ஸ்கில் இந்தியா டிஜிட்டல் ஹப் மூலம், வேட்பாளர்கள் வேலை மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அணுகலாம்.

மேலும், வேலைபயிற்சி (OJT) என்பது PMKVY இன் உள்ளார்ந்த அங்கமாக மாற்றப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு வாய்ப்புகளை எளிதாக்க கௌசல் மஹோத்சவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

# ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு நிதி வழங்க மறுப்பதா?

### திட்டத்தை முழுவதுமாக முடக்க ஒன்றிய அரசு செய்யும் சதி அம்பலம் – கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.14-

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளுக்கு ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டிய நிதி தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, தன்னுடைய நிர்வாகப்பிழையை மறைக்க தமிழ்நாடு அரசின் மேல் பழிசுமத்தி, நிதி வழங்க ஒன்றிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. இதன் வாயிலாக, தர்மபுரி உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்களின் தாகம் தீர்க்கும் முக்கியமான திட்டத்தை முடக்குவதற்கு ஒன்றிய அரசு செய்யும் திட்டமிட்ட சதி அம்பலமாகியுள்ளது.

**1. தமிழ்நாட்டின் கோரிக்கையை உதாசீனப்படுத்தும் போக்கு:**

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டம். 2008-ஆம் ஆண்டு அவர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு, அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் சென்று நிதி உதவி பெற்று பணிகளைத் தொடங்கினார்கள். 2011-ஆம் ஆண்டு கழக ஆட்சியின் நிறைவில், பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டன.

இந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு ஆட்சித்தலைமையேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் நோக்கில் இரண்டாம் கட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள். இதற்குப் பிறகு, 8,428.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்றாம் கட்டத்தையும் அறிவித்தார்கள்.

ஆனால், இந்த மூன்றாம் கட்டத்திற்கு ஜல்ஜீவன் திட்டத்தின் சார்பாக விடுவிக்க வேண்டிய நிதியை விடுவிக்காமல் இதுவரை தாமதப்படுத்தி வருகிறது ஒன்றிய அரசு. மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அளித்த தரவின்படி, 2283 கோடி ரூபாய் இதற்கென்று வர வேண்டும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் பல முறை கோரிக்கை வைக்கப்பட்டும், இது தொடர்பாக ஒரு சிறிய அக்கறையைக் கூட ஒன்றிய அரசு காட்டாமல் தவிர்ப்பது, தமிழ்நாட்டையும், அதன் மக்களையும் உதாசீனப்படுத்தும் போக்கே.

**2. திட்ட அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பித்தும் முட்டுக்கட்டை:**

ஒன்றிய அரசு தற்போது அளித்துள்ள பதிலில், "ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு சரியான நேரத்திற்கு அளிக்கவில்லை" என்று கூறியுள்ளது. இது அப்பட்டமான பொய் என்பதற்கு, ஜல்ஜீவன் திட்டத்தை சிறப்பாக அமல்படுத்தி வரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்வதே ஆதாரம்.

நடந்தது இது தான். தமிழ்நாடு அரசு அத்தனை ஆய்வுகளையும் சரியாக செய்து, ஜல்ஜீவன் திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடு முடிவதற்கு முன்பே, திட்ட அறிக்கையை ஒன்றிய அரசிடம் சமர்ப்பித்து விட்டது. ஆனால், ஒன்றிய அரசு தனது இணையதளத்தில் அதை விரைந்து பதிவேற்றாமல் வீணாக காலத்தை கழித்தது.

இப்போது வந்து, தமிழ்நாடு அரசின் மீது பழிபோடுவது தன்னுடைய நிர்வாகப்பிழையை மக்களின் முன்னால் மறைக்க ஒன்றிய அரசு ஆடும் நாடகமே.



**3. புதிய பட்ஜெட் அறிவிப்பிற்குப் பிறகும் நிதி வழங்கும் அறிகுறி இல்லை:**

சமீபத்திய பட்ஜெட்டில் ஜல்ஜீவன் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு 2028 வரை தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது கிடைத்துள்ள பதில்களில் இருந்து, இந்த பட்ஜெட்டிற்குப் பிறகும் ஒகேனக்கல் திட்டத்திற்கு நிதி வழங்குவது குறித்து ஒன்றிய அரசு எந்த அறிகுறியும் வெளிப்படுத்தவில்லை.

முன்பு தான் கெடுமுடிந்து விட்டது என்று சொல்லப்பட்டு விட்டது. ஆனால், இப்போது அந்த நிதியை விடுவிக்க என்ன தயக்கம்? எது தடுக்கிறது? இது மூலம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தையே முழுவதுமாக முடக்குவதற்கு ஒன்றிய அரசு சதி செய்து வருவது அம்பலமாகியுள்ளது.

தன்னுடைய நிர்வாகப் பிழையை தமிழ்நாடு அரசின் மேல் சுமத்தி தப்பிக்கப் பார்க்கும் ஒன்றிய அரசின் செயலை ஏற்க முடியாது. ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை முடக்குவதற்கு சதிசெய்வதை நிறுத்தி விட்டு, மூன்றாம் கட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.




ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வரும் பா.ஜ.க. மற்றும் அதற்கு துணைபோகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, பண்ருட்டி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில், பண்ருட்டி பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது. நகர்மன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார். மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். காங்கிரஸ் மணி,முருகன்,தீ.க. காமராஜ், சி.பி.எம் .தேவராஜுலு,உதயகுமார், சி.பி.ஐ. குணசேகரன்,சக்திவேல், விசிக கார்த்தி,கிருஷ்ணராஜ், இயூமுஸ்லீம்லீக்மாலிக், ம.நே.க. காசிம், ம.நீ.மை. செந்தில்,த.வா.க. சுரேந்தர்,செந்தில்,கண்ணன், த.ம.ஜ.க. ஷேக் நூர்தீன்,ம.தி.மு.க. சிவசங்கரன்,ஆம்ஆத்மி பாக்கியராஜ்,கட்டிட தொழிலாளர் கழக சுப்புராயலு, எஸ்டிபிஐ காதர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்

**பிப்ரவரி 14 (2006)**



வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்

**பிப்ரவரி 14 (1985)**



சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.

"ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**